# விடுதலை ஆவணம்

201______ம் வருடம் ______ மாதம் ____ம் நாள் ______________________ விலாசத்தில் வசிக்கும் திரு.________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) ஆகிய தங்களுக்கு

______________________ விலாசத்தில் வசிக்கும் திரு.________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) ஆகிய நான்

மனப்பூர்வமான சம்தத்துடன் சம்மதித்து எழுதிக்கொடுக்கும் விடுதலைப் பத்திரம் என்னவென்றால்.

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'ஏ' ஷெடியூல் சொத்தானது __________. ______________ பதிவு மாவட்டம், __________ சார்பதிவகம், ______________ கிராமம், சர்வே எண்._____ மனை எண்.____, கதவு எண்.___________________ இதற்கு உட்பட்ட விஸ்தீரணம் __________ சதுரடிக்கொண்ட சொத்தினை, நமது தகப்பனார் திரு.______________ அவர்கள் கடந்த __________ந் தேதியில் ______________ சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம், ______ வருடத்திய _________ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரப்படிக்கு, தமது பெயருக்கு கிரையம் கிடைக்கப் பெற்று அன்று முதல் அவர் மேற்படி சொத்தினை அவருடைய சுவாதீனத்தில் சர்வ அக்கு உரிமைகளுடன் சர்வ வில்லங்கச் சுத்தியாய் ஆண்டனுபவித்துக்கொண்டு வந்தார்.

அவ்வாறு ஆண்டனுபவித்து வருகையில் நமது தகப்பனார் பிரஸ்தாப சொத்தைப் பொருத்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் _____ தேதியில் காலமாகிவிட்டார். அவர் காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் என ______ வட்டாட்சியர் வழங்கிய வாரிசுரிமை சான்று எண்._____ நாள்._______ன்படி நமது தாயார் திருமதி._________ மற்றும் நாம் இருவரும் வாரிசுகள் ஆவோம். இந்நிலையில் _____ தேதியில் நமது தாயாரும் இயற்கை

எய்திவிட்ட நிலையில், பிரஸ்தாப சொத்தை நமது தந்தையின் நேரடி வாரிசுகளாக நாம் இருவர் மட்டும் கூட்டாக அனுபவித்து வருகிறோம்.

மேலும் நம்மால் இச்சொத்தை கூட்டாக ஆண்டனுபவிக்க முடியாத காரணத்தினாலும், தங்கள் மீது எனக்குண்டான அன்புனாலும், பிரியத்தினாலும் இதனடியில் 'பி' ஷெடியூலில் கண்ட எனக்குண்டான பிரிபடாத 1/2 பாக சொத்தினை, இன்றைய தேதியில் நான் தங்களின் பெயருக்கு இந்த விடுதலை பத்திரப்படிக்கு விடுதலை செய்து தங்களின் சுவாதீனத்தில் ஒப்படைத்து விட்டேன்.

ஆகையால் இன்று முதல் தாங்கள் இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'பி' ஷெடியூல் சொத்தினை தங்கள் பெயரில் மனைக்குரிய ரெவின்யு ரிக்கார்டுகளையும், பட்டாவையும் சப்-டிவிஷன் செய்துக்கொண்டும், கட்டிட கட்ட அனுமதி பெற்றக்கொண்டு, மாநகராட்சி கட்டிட வரிவகையறாக்கள், மின்இணைப்பு வரி வகையறாக்கள், குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி வகையறாக்கள் உள்ள பாகத்திற்கு பெயர் மாற்றிப் பெற்றுக்கொண்டு, தங்களின் இஷ்டம்போல் தங்களின் புத்திர பௌத்திர பாரம் பரியமாய், வித்தொத்தி தானாதி வினிமிய விக்கிரையங்களக்கு உரித்த யோக்கியங்களுடன் சர்வ சுதந்திர பாத்தியதைகளுடன் சர்வ வில்லங்க சத்தியாய் ஆண்டனுபவித்துக்கொள்ள வேண்டியது.

அப்படி தாங்கள் இன்று முதல் இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'பி' ஷெடியூல் சொத்தினை ஆண்டனுபவித்துக் கொள்வதில் எனக்கும், எனது வாரிசுகளுக்கும், சந்ததிகளுக்கம் மற்ற உள்ள எவருக்கும் எவ்விதமான சொந்தமும், சம்மந்தமும், பாக அக்கு வாரிசு உரிமையும், பின்தொடர்ச்சி தாவாக்களும் ஏதும் கிடையாது என்று இதன் மூலம் நான் உறுதி அளிக்கிறேன்.

**சொத்து விவரம்**

ஆக இந்தப்படிக்கு நான் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமான சம்மதித்து எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணம் ஆகும்.

**சாட்சிகள்.**

1.

2.